

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைப்படி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதி கிட்டப்பநாயனப்பள்ளி கிராமத்தில் பகுதிநேர நியாயவிலைக்கடையை திறந்து வைத்தும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கான பணிகளையும், சிமெண்ட் சாலை சின்னமட்டாரப்பள்ளி ஊராட்சியில் சுற்றுச்சுவர், சிமெண்ட் சாலை, நிழற்குடை புதுப்பிப்பது, வெங்கடாபுரம் ஊராட்சியில் புதிய தார் சாலை அமைக்கும் பணிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் ஒன்றிய பொது நிதியிலிருந்து ஒரு கோடியே 40 லட்சம் திட்ட மதிப்பீட்டில் பணிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சிகளில் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் இசை, பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், காந்தி உள்ளிட்ட நிர்வாகிகள், பெண்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நமக்கு நாமே திட்டம் மூலம் திருப்பூர் ரோட்டரி பொதுநல அறக்கட்டளை பங்களிப்புடன் ரூ.37.50 கோடி மதிப்பீட்டில் புற்றுநோய் நவீன கதிரியக்க சிகிச்சை மையத்தினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர். ப.செந்தில்குமார் தலைமையில் தேசிய சுகாதார இயக்க மேலாண்மை இயக்குநர் டாக்டர். ஏ.அருண் தம்புராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே, திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்து பார்வையிட்டனர். இதில் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித், திருப்பூர் ரோட்டரி பொது நல அறக்கட்டளை தலைவர் ஆ.முருகநாதன், திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்க தலைவர் கே.எம்.சுப்பிரமணியன், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர், மரு.ரா.மனோன்மணி உள்பட மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அறங்காவலர்கள் மற்றும் நன்கொடையாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### வாணியம்பாடி தொகுதி – ஆலங்காயம் பேரூராட்சி முதல் காவலூர் வரை

# ஒருவழிச் சாலை - இருவழிச் சாலையாக மாற்றி அமைக்கப்படும்!


## சட்டப்பேரவையில் – அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு!

**சென்னை, பிப்.26–**

**வாணியம்பாடி தொகுதி – ஆலங்காயம் பேரூராட்சி முதல் காவலூர் வரை உள்ள ஒரு வழிச்சாலை இரு வழிச்சாலையாக மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என, சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.**

**கேள்வி நேரத்தின் போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:–**

**கோ.செந்தில் குமார்:** வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் பேரூராட்சி முதல் காவலூர் வரை உள்ள ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக மாற்றி அமைக்க அரசு முன்வருமா?



**அமைச்சர் எ.வ. வேலு:** தாங்கள் ஒரு rulingஐக் கொடுத்திருக்கிறீர்கள். சுருக்கமாகக் கேள்வி கேட்டால், சுருக்கமாக அமைச்சர்கள் பதில் சொல்லுங்கள் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் ஆசிரியராக இருந்து, அங்கே வகுப்பறையில் மிகவும் discipline ஆக நடத்த வேண்டுமென்று கருதக்கூடிய ஒரு நிலையிலிருந்து தங்களுடைய வாழ்க்கையை நீங்கள் அமைத்துக்கொண்டவர்கள். அதனால், உங்களுடைய அந்தக் கருத்துக்கு, எங்களுக்கு எந்த மாற்று கருத்தும் இல்லை. நாங்களும்கூட திருக்குறளைப் போன்று தான் எங்களுடைய பதிலைச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறோம். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்கள் நாலாடியாரைப்போல் பதில் இருந்தால், திருப்தியாக இருக்குமென்று அவர்களெல்லாம் கருதுகின்ற காரணத்தினால் தான், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சற்று விரிவாகப் பதில் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர், போளூர், ஜமுனாமரத்தூர், ஆலங்காயம், வாணியம்பாடி சாலையானது திருவண்ணாமலை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களை இணைக்கும் சாலையாகும். இது, 82 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஒரு மாநில நெடுஞ் சாலை. இந்தச் சாலையில், 57 கிலோ மீட்டர் நீளம் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ளது. மீதமுள்ள 27 கிலோ மீட்டர் சாலை, திருப்பத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த வாணியம்பாடி தொகுதியைச் சார்ந்தது. இதில் 21 கிலோ மீட்டர் இருவழிச் சாலையாக அகலப்படுத்தப்பட்டு, சாலைகள் தற்போது நல்ல நிலையில் இருக்கிறது. மீதமுள்ள 6 கிலோ மீட்டர் சாலை, வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிற காரணத்தினால், அதற்கு நாங்கள் NOC கேட்டிருக்கிறோம். அந்த மறுப்பில்லா சான்றிதழ் வந்தவுடனேயே, அதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அந்த 6 கிலோ மீட்டர் சாலைப் பணியும் நிறைவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கோ. செந்தில் குமார்:** வாணியம்பாடி நகராட்சி மையப்பகுதியிலுள்ள செட்டியப்பனூர் கூட்டுரோடு முதல் வளையாம்பட்டு வரையிலும், ஏனென்றால் வளையாம்பட்டு முதல் கிறிஸ்தமனூர் ஊராட்சியில் NHAI சாலையை அகலப்படுத்தி கொடுத்திருக்கிறோம். அங்கு தேவையை இல்லை. ஆனால், நகர மையப் பகுதியில் கொடுத்தால் பள்ளி, கல்லூரி செல்லும் மாணவர்களும், RDO office, நகராட்சி அலுவலகம். . . இருவழிச் சாலையாக மாற்றித் தர வேண்டும்.

**அமைச்சர் எ.வ.வேலு:** சட்டமன்ற உறுப்பினர் செந்தில் குமார் குறிப்பிட்டதைப்போல் வாணியம்பாடி என்பது வெளிநாட்டினுடைய பொருளாதாரத்தை ஈர்க்கிற ஊர். தோல் தொழிற்சாலைக்கு பெயர்போன ஊர், நிறைய தொழிலாளர்கள் பணியில் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். காரணம் அது என்னுடைய பழைய பாராளுமன்றத் தொகுதி. என்னுடைய பாராளுமன்றத் தொகுதியில் வாணியம்பாடி இருந்தது. அதனால் வாணியம்பாடியில் அனைவரையும் நான் அறிவேன். அந்த அடிப்படையில் அவர் சொல்கிற அந்தச் சாலை என்பது முக்கியமான சாலை தான். அதில் ஒன்றும் மாற்றுக்கருத்து இல்லை. ஏற்கெனவே, திருப்பத்தூர் மாவட்டத்தை பொறுத்த அளவிற்கு இந்த ஆட்சியிலே முன்னுரிமை கொடுக்கப்பட்டு பல சாலைகளை விரிவாக்கம் செய்திருக்கிறோம். இந்தச் சாலை வனத் துறை சம்பந்தப்பட்ட சாலையாக இருக்கிற காரணத்தால்தான் விரிவாக்கம் செய்வதிலே தடையிருக்கிறது. ஆனால், அனுமதிக்க வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்திருக்கிறேன். எனவே, அனுமதி பெற்று அடுத்த நிதி யாண்டிலே எடுத்துக்கொள்ளப்படும். இன்னும் சில சாலைகள் பற்றி அவர் இங்கே குறிப்பு கொடுத்திருக்கிறார். அவற்றை கடிதமாகக் கொடுத்தால் துறைக்கு அனுப்பி, அதை விரிவுபடுத்தி கட்டாயம் அவருடைய உணர்வைப் புரிந்துகொண்டு இந்த ஆட்சி, சாலை விரிவாக்கம் செய்யும்.

**கோ. செந்தில் குமார்:** Newtown LC81 இரயில்வே மேம்பாலம் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் இந்துக்களையும், ஒரு இலட்சம் இஸ்லாமியர்களையும் இணைக்கும் பாலம். கிட்டத்தட்ட நீண்ட நாள் கோரிக்கை. இதற்காக 2024–ஆம் ஆண்டு பேசும்போது இடம் கையகப்படுத்த 36 கோடி நிதி ஒதுக்கப்பட்டு இரண்டரை வருடங்கள் ஆகிவிட்டன. இரயில்வே துறை நிர்வாகத்திடம் கேட்கும்போது தமிழக அரசு அந்த இடத்தை கையகப்படுத்தி கொடுக்காததால்தான் அந்தப் பணி நிற்பதாகவும், கிட்டத்தட்ட இரண்டரை வருடங்களாக RUB, அதாவது சுரங்கப்பாதை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு ஒப்புதல் கொடுத்தும், தமிழக அரசு இடம் கையகப்படுத்தி கொடுக்காததால்தான் அந்தப் பணி நிலுவையிலுள்ளது என்று இரயில்வே துறை நிர்வாகம் கூறிய காரணத்தாலும் அந்தப் பணி எப்பொழுது நடைபெறும்?

**அமைச்சர் எ.வ.வேலு:** சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகிற இரயில்வே பாலம் என்பது முக்கியமானது தான். ஏனென்றால் இஸ்லாமியர் கல்லூரியையும் காதர்பேட் சாலையையும் இணைப்பதற்காக கடவு எண் 81ல் மேம்பாலம் கட்டுவது முக்கியமான ஒன்றுதான். இஸ்லாமியர் கல்லூரி என்பது வடஆற்காடு மாவட்டத்திலேயே புகழ்பெற்ற கல்லூரி. ஏன், நம்முடைய பேராசிரியர் ஜவாஹிருல்லா அவர்கள் அக்கல்லூரியில்தான் பேராசிரியராக பணியாற்றினார். அப்படியொரு முக்கியமான கல்லூரி. கல்லூரி மாணவர்கள் வந்து செல்வது என்பது அதிகமாக இருக்கிறது என்பதை நானும் அறிவேன். ஆனால் என்ன நிலைமை என்று சொன்னால், இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்கு அவர்கள் ஒத்துழைக்கவில்லை. அதனால், கீழேயிருக்கிற underpass க்குதான் ஒப்புக்கொண்டனர். அந்த அடிப்படையிலே இரயில்வே கடவு பாலம் கட்டுவதற்காக மேற்கண்ட இடத்தில் மேம்பாலம் அமைக்க சாத்தியக்கூறு என்ற அடிப்படையிலே under pass அதாவது சுரங்கப்பாதை அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டு, அதற்காக 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இன்றைக்கு நில எடுப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்பணி நடக்குமா, நடைபெறாதா என்றால் கட்டாயம் நடக்கும். நில எடுப்புப் பணிகள் முடிந்தவுடன் underpass அதாவது சுரங்கப்பாதை கட்டாயம் அமைக்கப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### அரங்கங்கள், மணி மண்டபங்கள், சிலைகள், நினைவுத் தூண்கள் – என

# கடந்த 5 ஆண்டு கால கழக அரசில் - 124 அமைப்புகள்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பெருமிதம்!

*சென்னை, பிப்.26 -*

*சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது, வினா ஒன்றுக்குப் பதிலளித்த செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், “தமிழ்நாட்டில் வரலாற்றில் இல்லாத அளவிற்கு கடந்த ஐந்தாண்டு கால கழக அரசில் - அரங்கங்கள், மணி மண்டபங்கள், சிலைகள், நினைவுத் தூண்கள் என்கிற வகையிலே 124 அமைப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.*



*சட்டப்பேரவையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இதுகுறித்து கூறியதாவது :-*

*இந்த அரசு 2021 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டினுடைய வரலாற்றில் இல்லாத அளவிற்கு 5 ஆண்டு காலத்திலே ஏறத்தாழ அரங்கங்கள், மணிமண்டபங்கள், சிலைகள், நினைவுத் தூண்கள் என்கிற வகையிலே 124 அமைப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. அதில் சில பணிகள் நடைபெற்று வருகின்றன. சில பணிகள் இன்னும் ஒரு 10 நாட்களுக்குள் சில சிலைகள் எல்லாம் திறக்கப்படவிருக்கின்றன. ஆனால், 5 ஆண்டு காலத்திலேகூட அல்ல, 10 ஆண்டுகாலத்தில் 2011 முதல் 2021 வரை மணிமண்டபங்கள், சிலைகள், நினைவுச் சின்னங்கள் என்கிற வகையில் 30 எண்ணிக்கையில்தான் அது அமைக்கப்பட்டன. ஆனால் இந்த 5 ஆண்டு காலத்திலே 124 அமைப்புகள் இன்றைக்கு உருவாக்கப் பட்டிருக்கிறது என்பதை இந்தநேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.*

*இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் குறிப்பிட்டார்.*

### சென்னை மாநகர புறநகர் மின்சார ரயில்கள் ரத்து – தென்னக இரயில்வேயின் அலட்சியம்!

# மக்களின் போக்குவரத்துத் தேவைக்கு தமிழ்நாடு அரசு சிறப்பு பேருந்து சேவை!

## அமைச்சர் சா.சி. சிவசங்கர் அறிக்கை!

**சென்னை, பிப்.26–**

**புறநகர் மின்சார இரயில் ரத்து, தென்னக இரயில்வேயின் அலட்சியத்தை காட்டுகிறது. கேட்காமலேயே அரசு பேருந்து சேவை வழங்கப்படுகிறது என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் உள்ள ரயில் தண்டவாளங்கள் மற்றும் நடைமேடைகள் தென்னக ரயில்வே மூலம் சீரமைக்கும் பணி கடந்த பிப்ரவரி 20 அன்று முதல் மேற்கொள்ளப்பட இருப்பதாக முந்தைய நாளான பிப்ரவரி 19 அன்று திடீரென அறிவிப்பு வெளியானது. இது தொடர்பாக முறையான அறிவிப்பு தென்னக ரயில்வே இடமிருந்து மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்கப்படவில்லை. இது குறித்து மாநகர் போக்குவரத்துக் கழக த்தின் சார்பில் தென்னக ரயில்வேயை தொடர்பு கொண்ட பின்னரே மின்னஞ்சல் மூலம் விவரங்கள் பெறப்பட்டது.

இந்த திடீர் அறிவிப்பில் கூட்ட நெரிசல் நேரங்களில் (Peak Hours) ஐந்து நிமிட ங்களுக்கு ஒரு புறநகர் மின்சார ரயில் சேவை என்பது 20 நிமிடங்களுக்கு ஒரு ரயில் இயக்கப்படும் என்ற நேர அட்டவணை மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், நடைமுறையில் 30 நிமிட இடைவெளியில் மட்டுமே புறநகர் மின்சார ரயில் சேவை சென்னை கடற்கரையிலிருந்து தாம்பரம், செங்கல்பட்டு இரு மார்க்கங்களிலும் இயக்கப்பட்டு வருகிறது. இந்த குறைக்கப்பட்ட நேர அட்டவணை 20.02.2026 முதல் 05.04.2026 வரை கடைப்பிடிக்கப்படும் என தென்னக இரயில்வே அறிவித்துள்ளது.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் ஆண்டு இறுதி தேர்வு மற்றும் பருவத்தேர்வுகள் ஆண்டுதோறும் மார்ச் மாதத்தில் நடைபெறுவது வழக்கம். இந்த காலகட்டத்தில் எவ்வித ஆலோசனையும் இன்றி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் கருத்தில் கொள்ளாமல் எழும்பூர் இரயில் நிலைய சீரமைப்பு பணிகள் துவக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளினால் மாணவர்கள் ஆண்டு இறுதி தேர்விற்கான பயிற்சி மேற்கொள்ளவோ தேர்வினை உரித்த நேரத்தில் எழுதுவதற்கும் மிகுந்த சிரமத்திற்கு ஆளாவார்கள்.

இருப்பினும், சென்னை மாநகரின் போக்குவரத்து தேவையினை பூர்த்தி செய்வதற்காக மாநகர் போக்குவரத்துக் கழகம் மூலம் ஏற்கனவே தடத்தில் இயக்கப்பட்டு வரும் 314 சேவைகளுடன் கூடுதலாக 60 சிறப்பு பேருந்துகள் இந்த வழித்தடங்களில் இயக்கப்படுகிறது. மேலும் இந்த கூடுதல் இணைப்பு பேருந்து சேவைகளின் மூலம், எழும்பூர் இரயில் நிலையத்திலிருந்து தலைமைச் செயலகம், எழிலகம், சென்ட்ரல், அரசு பொதுமருத்துவமனை, உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை கடற்கரை இரயில்நிலையம் முதலிய இடங்களுக்கு பயணிகள் தங்களது வேலை நிமித்தமாக பயணத்தேவையினை பூர்த்தி செய்யும் விதமாக திட்டமிட்டு இயக்கப்படுகிறது.

சென்னை மாநகர மக்களின் போக்குவரத்து பாதிப்பை இருபதாம் தேதி அன்றே மாநில அரசு கணித்து கூடுதல் பேருந்துகளை மாநகர் போக்குவரத்து கழகம் மூலம் இயக்கப்பட்டு ஓரளவு நிலைமை சீர் செய்யப்பட்டது. முன்னதாகவே தென்னக ரயில்வே மூலம் மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு உரிய தகவல் அளித்திருந்தால் மற்றும் உரிய ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டு இருந்தால் பயணிகள் பாதிக்காத வண்ணம் உரிய நடவடிக்கை கலந்தாலோசிக்கப் பட்டு எடுத்திருக்கலாம். புறநகர் இரயில் சேவைகள் இயக்கம் குறைக்கப்பட்ட தகவல் வெளியான உடன் மாநகர் போக்குவரத்துக் கழகம் மூலம் கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட்டது. இதன் பின்னர்தான் தென்னக ரயில்வே விழித்துக்கொண்டு பிப்ரவரி 24 ஆம் தேதி முதல் செங்கல்பட்டு, தாம்பரம் ஆகிய இரயில் நிலையங்களி லிருந்து புனித தோமையார் மலை மற்றும் எழும்பூர் வரை குறுகியதூர இடங்களுக்கு புறநகர் ரயில்கள் இயக்கப்படுகின்றன.

ஒவ்வொரு புறநகர் மின்சார ரயில் நிலையம் அருகே உள்ள பேருந்து நிறுத்தங்கள் மற்றும் நிலையங்களில் இருந்து தேவையான அளவு மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்கப்படுவதால் ஒரே இடத்தில் பயணிகள் கூடி சிரமம் ஏற்படாத வண்ணம் உடனுக்குடன் அவர்கள் தாங்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு உரித்த நேரத்தில் செல்கின்றனர். புறநகர் இரயில் பயணிகள் 3 மாத காலத்திற்கான மாதாந்திர பயண அட்டை பெற்றுள்ளதால் கூடுதல் பேருந்துகளில் உரிய பயணச்சீட்டு கட்டணம் செலுத்தி தங்களது இடங்களுக்கு செல்ல தயக்கம் காட்டுவதாக தெரிகிறது. இருப்பினும், மாநகர் போக்குவரத்துக் கழகம் சென்னை மாநகர மக்களின் போக்குவரத்து தேவை யினை அறிந்து சிறப்பான சேவையை எந்தவொரு இக்கட்டான காலங்களிலும் நாள்தோறும் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து இது குறித்து விவரங்கள் கேட்டறிந்து வருகிறார்கள். பயணிகளுக்கு சிரமம் இல்லாமல் பயணிக்க ஏற்பாடுகளை செய்ய அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

இவ்வாறு அமைச்சர் சா.சி. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.



தலைவாசல் வடக்கு ஒன்றியம் மணிவிழுந்தான் ஊராட்சி, கிராமத்தில் உள்ள பழனிமுத்து மற்றும் சக்திவேல் ஆகியோர் கூரை வீடுகள் தீ பற்றி முழுவதும் எரிந்து சேதமடைந்தது .இந்த தகவல் அறிந்ததும் கிழக்கு மாவட்ட துணைச் செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான, கு.சின்னதுரை அத்தியாவசிய பொருட்கள் வழங்கி நிதியுதவி வழங்கினார். ஒன்றியச் செயலாளர் பாலமுருகன், நடேசன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் பாலகிருஷ்ணன், கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.




கோவை மாநகர் மாவட்டக் கழக அலுவலகத்தில் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” பரப்புரைக்கான ஆலோசனைக் கூட்டம் கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக மகளிர் அணி பிரசாரக்குழு செயலாளர் செ.உமாமகேஸ்வரி, கோவை மாநகர் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அன்னம்மாள் ராஜா, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சி.ஆர்.கனிமொழி உள்பட மாவட்ட துணை அமைப்பாளர்கள், தலைவர், துணைத் தலைவர், பகுதி மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் வீரபாண்டி வடக்கு ஒன்றியம் முருங்கப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.50 மதிப்பில் சுழல் நிதியை கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. வழங்கினார். அப்போது மாவட்ட துணைச் செயலாளர் சுரேஷ்குமார், ஒன்றியச் செயலாளர் சதீஷ்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம் மற்றும் கூட்டுறவு அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.